முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1292

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

13.04.2023, வியாழக்கிழமை

1. ஞான வேலிகொண்ட அரங்கனே
ஞானிகளின் பலம்கொண்ட தேசிகனே
தான தர்ம சக்திகளோடு
தரணி எங்கும் சூட்சுமமாய் வலம் வருகின்ற அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 30 ம் நாள், 13.04.2023வியாழக்கிழமை)
வரமென அரங்கன் உன் நெறிகொண்டு
வையகத்தார் ஞானம் பயின்றால் போதும்
3. தர்மத்தோடு கூடிய ஞான வாழ்வு
தரணியோர்க்கு இலகுவாக பாதுகாப்பாக மாறி
மாறியே உன்வழி வருபவரெல்லாம் மகத்துவமும் மண்ணுலகில் இனி பிறவாத தத்துவமும்
ஆறுமுகன் என் ஆசி அருளால்கிட்டி அழியாமை பெற்று நிலைப்பது உறுதி
4. உறுதிகொண்டு அரங்கன் தர்மத்தை
உலகமெல்லாம் கொண்டு செல்லும் தொண்டர்கள்
வருமுலகில் என்னருள் ஆசியோடு
வள்ளலாக வாழுகின்ற வாய்ப்பு கிட்டும்
5. கிட்டுமே அரங்கன் தர்மம் வளரபெருக
குவலயமே நல்லாற்றல் கூடி
பெருமைமிக்க ஞானவான்களாக எங்கும் நிரம்பி
பேருலகம் ஞான ஆட்சிதனை அடையக்கூடும்
6. கூடாத வன்முறை எதிர்மறை
கொலை பாதக செயல்கள் அனைத்தும் ஒடுங்கி
நாடெங்கிலும் அமைதி தியாகம் ஞானம்
நாட்டிடுவேன் ஜீவகாருண்யநிலைகள் பெருகி

7. பெருகியே இந்த பேருலகம் நல்லுலகமாகும்
பெருமையும் பாதுகாப்பும் நிறைந்த
வறுமைவென்று இயற்கை வளமோடு
வல்லமைகூடுகின்ற ஞானலோகமாக மாற்றம் பெறும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–